பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 07 2024 **WEDNESDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஐ நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்கள் கொண்டுவர வேண்டியது அவசியம் என்று இந்தியாவும், ஆஸ்திரியாவும் வலியுறுத்தியுள்ளன.

2. டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

3. விவாகரத்தான இஸ்லாமிய பெண்கள் கணவரிடமிருந்து ஜீவனாம்சம் பெறுவதற்கு உரிமை உண்டு என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

4. உத்தரப்பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு மாற்றாக விவசாயிகளுக்கு குத்தகை நிலம் வழங்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

5. ஜிம்பாப்வே அணிக்கு எதிரான மூன்றாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் 183 ரன் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

**<<<<<<>>>>>**

ஆஸ்திரிய பிரதமர் திரு **Karl Nehammer** -வுடன் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பேச்சு நடத்தினார்.

அரசு முறைப்பயணமாக ஆஸ்திரியா சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று வியன்னாவில் அந்நாட்டு பிரதமரை சந்தித்து,

வர்த்தகம், முதலீடு, அறிவியல் தொழில்நுட்பம், பசுமை எரிசக்தி, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், புத்தாக்க தொழில்கள் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாடு, கலாச்சார ஒத்துழைப்பு, இருநாட்டு மக்கள் தொடர்பு உள்ளிட்ட விஷயங்கள் குறித்து விரிவாக பேச்சு நடத்தினார்.

உலகளாவிய மற்றும் மண்டல அளவிலான விஷயங்கள் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

பருவநிலை மாறுபாடு, பயங்கரவாதம் உள்ளிட்ட பெரிய சவால்களை மனித சமுதாயம் தற்போது சந்தித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பில் இணையுமாறு ஆஸ்திரியாவுக்கு, அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

பேரிடர் சவால்களை எதிர்கொள்வதற்கான கட்டமைப்புத் திட்டங்கள், உயிரி எரிபொருள் தொழில்நுட்பம் ஆகியவற்றில் இணைந்து செயல்படுமாறும் அவர் ஆஸ்திரியாவை கேட்டுக்கொண்டார். இந்திய – ஆஸ்திரிய நல்லுறவுக்கு இருநாடுகளிலும் உள்ள ஜனநாயகமும், சட்டத்தின் ஆட்சியும் வலுவான அடித்தளமாக அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

யுக்ரைன் மற்றும் மேற்காசிய போர் நிலைமை குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

தற்போதைய சூழ்நிலையில் போர் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வாக அமையாது என்றும் இரு தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

ஐ நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்களை கொண்டுவர வேண்டியது அவசியம் என்றும், அப்போதுதான் அந்த அமைப்புகள் வலுவாகவும், திறம்படவும் செயல்பட முடியும் என்று இரு தலைவர்களும் இப்பேச்சுக்களின்போது வலியுறுத்தியுள்ளனர்.

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் உள்கட்டமைப்பு மேம்பாடு, மின்னணு கட்டமைப்பு, உள்ளிட்ட மேம்பாட்டுப்பணிகளை ஆஸ்திரிய பிரதமர் வரவேற்றார்.

ஆஸ்திரிய பிரதமர் திரு **Karl Nehammer** -வுடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஆஸ்திரிய அதிபர் திரு **Alexander Van Der Bellen** –யும் இன்று மாலை சந்தித்து பேசுகிறார்.

வியன்னாவில் உள்ள இந்திய வம்சாவளியினரையும் சந்தித்து பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்துரையாடவுள்ளார்.

**<<<<<<>>>>>**

டெங்கு காய்ச்சல் பரவலை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா இன்று சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்திற்குபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், டெங்கு காய்ச்சல் வராமல் தடுப்பதற்கான திட்டங்கள், மாநிலங்களோடு இணைந்து காய்ச்சல் பரவுவதை தடுப்பதற்கான வழிமுறைகள் ஆகியவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

டெங்கு காய்ச்சல் குறித்த தகவல்களை அளிப்பதற்கும், மருத்துவ உதவி பெறுவதற்கும் 24 மணிநேரமும் செயல்படும் தொலைபேசி உதவி மையம் ஒன்றை, மத்திய சுகாதார அமைச்சகம் விரைவில் அமைக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

அனைத்து மாநிலங்களிலும் இந்த மையங்களை ஐந்து நாட்களுக்குள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின், பல்வேறு துறைகளுடன் குறிப்பாக, கல்வி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு ஆகிய துறைகளுடன் இணைந்து டெங்கு காய்ச்சலை தடுப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

டெங்கு காய்ச்சல் அதிகம் காணப்படும் மாநிலங்களுடன் இதுதொடர்பாக, தாம் பேச்சு நடத்த உள்ளதாகவும், அவர்களுக்கு தேவையான உதவிகளை மத்திய சுகாதாரத்துறை மூலம் செய்து தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு மருத்துவமனைகளில் டெங்கு காய்ச்சல் சிகிச்சைக்கான வார்டுகளை தயார் நிலையில் வைத்திருக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து மாநிலங்களும் டெங்கு காய்ச்சல் சிகிச்சைக்கான ஏற்பாடுகளை அனைத்து மருத்துவமனைகளிலும் தயார் நிலையில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

அனைத்து பள்ளிகளிலும் டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இதுகுறித்த விழிப்புணர்வை மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு பள்ளிகள் மூலமாக ஏற்படுத்த வேண்டும் என்றும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

விவாகரத்தான இஸ்லாமிய பெண்கள், கணவரிடமிருந்து இடைக்கால ஜீவனாம்சம் பெறுவதற்கு உரிமை உண்டு என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதுதொடர்பாக, தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை விசாரித்த நீதிபதிகள் திருமதி நாக ரத்னா, திரு **Augustine George Mashih** ஆகியோர் கொண்ட அமர்வு, குற்றவியல் நடைமுறைச்சட்டப்பிரிவு 125-ல் இதற்கான உரிமை உண்டு என்றும் தெரிவித்தனர்.

விவாகரத்து ஜீவனாம்சம் தொடர்பான வழக்கு முடிவடைந்த பிறகு திருமண உரிமை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், இஸ்லாமியப் பெண்கள் முழுமையான நிவாரணம் பெறலாம் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

உச்சநீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை வரவேற்பதாக பிஜேபி கூறியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் திரு சுதான்ஷு திரிவேதி, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு அனைத்து பெண்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை உணர்த்தியிருப்பதாகவும், இஸ்லாமிய பெண்களுக்கு இந்த தீர்ப்பு பெரிய நிவாரணமாக அமைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

**<<<<<<>>>>>**

உத்தரப்பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு சாகுபடி செய்ய இயலாத நிலங்களுக்கு மாற்றாக விவசாயிகளுக்கு குத்தகை நிலம் வழங்க, அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட லஷ்மிபூர் கிரி, பிலிவித், மாவட்டங்களில் ஆய்வு செய்த முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

வெள்ளப்பெருக்கு ஏற்படும் ஆறுகளை சீரமைத்து வெள்ள பாதிப்பு ஏற்படாமல் தடுப்பது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

**<<<<<<>>>>>**

இவ்வாண்டின் துரந்த் கோப்பை போட்டிகளுக்கான கேடயங்களை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வெளியிட்டார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், துரந்த் கோப்பை, குடியரசுத் தலைவர் கோப்பை மற்றும் சிம்லா கேடயங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அப்போது பேசிய திருமதி திரௌபதி முர்மு, ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் இடையே விளையாடும் கால்பந்து வீரர்களுக்கு அதிக வரவேற்பு உள்ளதாக குறிப்பிட்டார்.

விளையாட்டு வீரர்களின் ஆற்றல்மிக்க செயல்பாடுகள் பார்வையாளர்களிடையே அதிக அளவு எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி வருவதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வாண்டு துரந்த் கோப்பை போட்டியில் விளையாடும் அனைத்து வீரர்களுக்கும் தமது வாழ்த்துகளை தெரிவிப்பதாக அவர் கூறினார்.

கால்பந்தாட்டப் போட்டியில் வீரர்கள் ஆரோக்கியமான போட்டியை வெளிப்படுத்த வேண்டும் என்றும், வெற்றி – தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

துரந்த் கோப்பை கால்பந்தாட்ட வீரர்கள் நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

தில்லி முன்னாள் அமைச்சரும், ஆம் ஆத்மி கட்சியின் சட்டமன்ற உறுப்பினருமான திரு ராஜ்குமார் ஆனந்த் இன்று பிஜேபி-யில் இணைந்தார்.

புதுதில்லியில் உள்ள பிஜேபி தலைமையகத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் திரு அருண்சிங் முன்னிலையில், ஆம் ஆத்மி கட்சியின் மேலும் சில தலைவர்களுடன் பிஜேபி-யில் திரு ராஜ்குமார் ஆனந்த் இணைந்துள்ளார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய குற்றவியல் சட்டங்கள் தற்காலத்துக்கு ஏற்ப மின்னணு கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என மதுரையை சேர்ந்த வழக்குரைஞர் திரு கார்த்திக் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சிபிஎஸ்இ பாடத்திட்டத்தில் நடப்பு கல்வியாண்டில் 3 மற்றும் 6–ஆம் வகுப்பு புத்தகங்களில் மட்டும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக மத்திய இடைநிலை கல்வி வாரியம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்த வாரியம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், மற்ற வகுப்புகளுக்கு பழைய பாடநூல்களையே பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் 183 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் ஜிம்பாப்வே அணி சற்றுமுன்வரை 14.2 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 101 ரன் எடுத்துள்ளது.

ஹராரேயில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 182 ரன் எடுத்தது.

-----------

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Dhakshineswar Suresh** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-4 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் **Thantub Suksumrarn** -ஐ வென்றார்.

**<<<<<<END>>>>>**